A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi


# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in


## முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்

**<u>மேல்முறையீட்டு மனு எண் 91 / 2022</u>**

திரு D. சக்திவேல்,
எண் 160, (DSK) Tsk மருத்துவமனை எதிரில்,
NP நகர், திருப்பூர் – 641 606.

………மேல்முறையீட்டாளர்
(Rep by திரு P.மாலிய கருப்பசாமி)

எதிர்

உதவி மின்பொறியாளர்/ கிழக்கு/நகரம்/திருப்பூர்,
திருப்பூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தாராபுரம் ரோடு, உஷா திரையரங்கம் எதிரில்,
திருப்பூர் – 641 602.

...... எதிர்மனுதாரர்
(திரு G. கோபிநாத், உதவி மின்பொறியாளர்/ கிழக்கு/நகரம்/திருப்பூர்)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 17-10-2022</u>**

**<u>கேட்புரை நாள்: 12-01-2023</u>**

**<u>ஆணை நாள்: 27-01-2023</u>**

17.10.2022 அன்று பெறப்பட்ட திரு D. சக்திவேல், எண் 160 (DSK) மருத்துவமனை எதிரில், NP நகர், திருப்பூர் – 641 606 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 91/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 12.01.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

எண் 160, (DSK) மருத்துவமனை எதிரில், NP நகர், திருப்பூர் என்ற முகவரியில் கட்டப்பட்ட தனது கட்டிடத்திற்கு மின்இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளர் திரு.D.சக்திவேல் வசிக்கும் இடத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு மின்இணைப்பு வேண்டி இளநிலை பொறியாளர் அலுவலக முகவரிக்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கண்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ள கட்டிடத்தை களஆய்வு செய்த போது அந்த முகவரியில் 6 குடியிருப்புகள் இருப்பது கண்டறியப்பட்டதாகவும் எனவே பணி நிறைவு சான்றிதழ் சமர்ப்பிக்குமாறு எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரிடம் தெரிவித்துள்ளார்.

2.3 உரிய காலத்தில் பணி நிறைவு சான்றிதழ் சமர்ப்பிக்காத காரணத்தால் மின் இணைப்பு கோரும் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.4 எனவே, மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் திருப்பூர் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை 07.05.2022 அன்று அணுகியுள்ளார்.

2.5 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருப்பூர் மின்பகிர்மான வட்டம், 20.07.2022 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

### 3.0 மன்றத்தின் தீர்வு:

திருப்பூர் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 20.07.2022 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*
*திரு.D.சக்திவேல், திருப்பூர் அவர்களுக்கு அறிவிப்பது யாதெனில் தற்போது நடைமுறையிலுள்ள வாரிய விதிமுறைகளின் படி கட்டிடபணிநிறைவு சான்றிதழுடன் தாங்கள் புதிய மின்னிணைப்பிற்கான விண்ணப்பத்தினை இணையதளம் வாயிலாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் தங்களது கட்டிடத்திற்கு புதிய மின்னிணைப்பு வழங்கப்படும் என்பது தங்களுக்கு தெரிவிக்கப்பட்டு தங்களது மனு இம்மன்றத்தால் முடித்து வைக்கப்படுகிறது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 12.01.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு P.மாலிய கருப்பசாமி அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு G. கோபிநாத், உதவி மின்பொறியாளர்/ கிழக்கு/நகரம்/ திருப்பூர், திருப்பூர் மின்பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் எண்.160, (DSK) TSK மருத்துவமனை எதிர்புறம் ரோடு, N.P.நகர், திருப்பூர் – 641606 என்கிற முகவரியில் வசிப்பதாகவும் அவ்விடத்தில் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு மின்இணைப்பு வேண்டி கோவை மண்டலத்திற்குரிய

திருப்பூர் மின்பகிர்மான வட்டத்திற்குரிய டவுன் / கிழக்கு பிரிவு, உதவி / இளநிலை பொறியாளர் அலுவலக முகவரிக்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பம் 25.03.2022 அன்று பதிவு செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

5.2 மேற்குறிப்பிட்ட விண்ணபத்திற்கு மின்இணைப்பு கிடைத்திடாததால் திருப்பூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைத்தீர்மன்றத்தில் முறையீடு பதிவு எண் : 705221614112 நாள் : 07-05-2022 செய்யப்பட்டதாகவும், 05.07.2022 அன்று விசாரணை நடைபெற்று 20.07.2022 அன்று ஆணை வழங்கப்பட்டதாகவும் மேல்முறையிட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 மேற்குறிப்பிட்டுள்ள இடத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடமானது 2019ற்கு முன்னதாகவே கட்டப்பட்டுள்ள கட்டிடம் எனவும், புதிய கட்டிடம் அல்ல என தெரிவித்து அதற்கு ஆதாரமாக 2017/2018 முதல் வரி செலுத்திய நகல்களை இணைத்துள்ளதாகவும், ஆகவே, தனது கட்டிடம் புதிய கட்டிடம் அல்ல என மேல்முறையிட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம் தொழில்நுட்ப பிரிவின் குறிப்பாணையானது Memo No. CE/Comml/SE/Comml/EE3/AEE2/F.Plg.Per/D-139/2020, dt. 04-07-2020 தமிழக அரசு G.O.Ms.No.18, dated 04.02.2019 தேதியிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் நீர்வழங்கல் (MA.I), தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019 க்கு அறிவித்து 04.02.2019 முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 தனது கட்டிடம் 2019ற்கு முன்னதாகவே கட்டப்பட்டுள்ள கட்டிடம் ஆகும் எனவும் புதிய கட்டிடம் அல்ல என்பதை தெரிவித்துக் கொண்டு கட்டப்பட்ட கட்டிடத்திற்கு தொற்று நோய் காரணத்தினால் போதிய வருவாய் இல்லாததால் மின்இணைப்பு பெற்றிட இயலவில்லை எனவும், ஆகையால் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு மின்இணைப்பு பெறுவதற்கு ஆணை வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்:</u>

6.1 திரு.D.சக்திவேல், N.P.நகர், திருப்பூர் அவர்கள் வீட்டு மின் இணைப்பு வேண்டி 25.03.2022 அன்று இணையதளம் மூலம் விண்ணப்பம் அலுவலகத்தில்

பெறப்பட்டதாகவும், மேற்கண்ட முகவரியில் ஆய்வு மேற்கொண்டபொழுது, ஏற்கனவே அந்த முகவரியில் 207-003-3974, நாள் 16.09.2004-ல் வழங்கப்பட்ட மின் இணைப்பும், 207-003-6245 நாள் 02.09.2015ல் வழங்கப்பட்ட மின் இணைப்பும் பயன்பாட்டில் உள்ளதும், மேற்கண்ட முகவரியில் 6 குடியிருப்புகள் உள்ளதும் கண்டறியப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 தற்பொழுது நடைமுறையில் உள்ள Memo No.CE/ COMML/SE /COMML/EE3/ AEE2/F.Plg.Per/D-139/2020, Dt 04.07.2020ன் படி மூன்று வீடுகளுக்கு மேல் உள்ளதாலும், 2019 வருடத்திற்கு முந்தைய காலகட்டத்தில் நுகர்வோர் கூறிய இடத்தில், திருப்பூர் மாநகராட்சியில் ஒரு வீட்டுக்கு மட்டும் வரி செலுத்தி வருவது தெரியவருவதாலும், 20002070322378 / 25.03.2022 அன்று மூன்றாவது மின் இணைப்பிற்கான இணையதளம் வாயிலாக பதிவு செய்யப்பட்ட விண்ணப்பம் முறையான தகவல் தெரிவிக்கப்பட்டு ரத்து செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 வாரிய விதியின்படி, 3 குடியிருப்புகளுக்கு மேல் கொண்ட கட்டிடங்களுக்கு பணி நிறைவு சான்றிதழ் பெற்று மின் இணைப்பு வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், மனுதாரரது வீடு 6 குடியிருப்பு பகுதிகளை கொண்டுள்ளதாலும் மனுதாரர் பணி நிறைவு சான்றிதழ் பெற்று சமர்பிக்காத காரணத்தாலும் மனுதாரரது விண்ணப்பம் 05.04.2022 அன்று ரத்து செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேலும், மனுதாரர் தனது வீடு 2019-ம் ஆண்டிற்கு முன்பே கட்டப்பட்டது என கூறியதாகவும், ஆனால் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி பெறப்படாமல் உள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேலும், 3 குடியிருப்பு பகுதிகளுக்கு அதிகமாக உள்ள வீடுகளுக்கு கட்டிட நிறைவு சான்றிதழ் பெற்றபின் மின் இணைப்பு வழங்க வேண்டும் என்பது மின் வாரிய தலைமையகத்திலிருந்து 04.07.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவாகும். இந்த உத்தரவு அனைத்து மின் வாரிய அலுவலகங்களிலும் கடைபிடிக்கப்பட்டு வருவதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மனுதாரரது விண்ணப்பம் Hold பண்ணப்பட்டதற்க்கான காரணம் மனுதாரரது கைபேசிக்கு குறுஞ்செய்தியாக அனுப்பப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் மனுதாரர் பணி நிறைவு சான்றிதழ் பெற்று சமர்பிக்காததால் மனுதாரது விண்ணப்பம் ரத்து செய்யப்பட்ட விவரமும், ரத்து செய்யப்பட்டதற்கான காரணமும் மனுதாருக்கு தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 எனவே, மனுதாரர் கட்டிட நிறைவு சான்றுடன் 6 குடியிருப்பு பகுதிகளை கொண்ட தன்னுடைய வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி இணையதளம் மூலம் விண்ணப்பிக்கும் பட்சத்தில் மனுதாரரது வீட்டிற்கு மின் இணைப்பு வழங்கப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின்குறை தீர்ப்பாளரின் தீர்வு:</u>

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திரு D. சக்திவேல், எண்.160, (DSK) TSK மருத்துவமனை எதிர்புறம் ரோடு, N.P.நகர், திருப்பூர் – 641606 என்கிற முகவரியில் வசித்து வருவதாகவும், அவ்விடத்தில் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு மின் இணைப்பு வேண்டி உதவி பொறியாளர்/ நகரம்/கிழக்கு/திருப்பூர் அவர்களுக்கு இணையதளம் வாயிலாக 25.03.2022 அன்று விண்ணப்பித்துள்ளார்.

7.3 மேல்முறையீட்டாளரின் விண்ணப்பித்தின் பேரில் மேற்கண்ட முகவரியில் எதிர்மனுதாரர் ஆய்வு மேற்கொண்ட போது ஏற்கனவே அந்த முகவரியில் 16.09.2004–இல் வழங்கப்பட்ட 207–003–3974 என்ற மின் இணைப்பும், 02.09.2015–இல் வழங்கப்பட்ட 207–003–6245 என்ற மின் இணைப்பும் பயன்பாட்டில் உள்ளது தெரியவந்துள்ளது. மேலும் மேற்கண்ட கட்டிடத்தில் 6 குடியிருப்புகள் உள்ளதாகவும், ஒரு குடியிருப்பின்மேல் தற்சமயம் கான்கிரீட் தளம் அமைத்து இரண்டு தளங்களுக்கான கட்டுமான பணிகள் நடந்து கொண்டிருப்பதாக கண்டறியப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 எனவே, எதிர்மனுதாரர் தற்போது நடைமுறையிலுள்ள விதிமுறை Memo No. CE/ COMML/ SE/ COMML/ EE3 /AEE2 /F. Plg. Per/ D–139 / 2020, Dt. 04.07.2020–

இன்படி மேல்முறையீட்டாளரின் கட்டிடம் மூன்று குடியிருப்புகளுக்கு மேல் உள்ளதால் அக்கட்டிடத்திற்கு மின் இணைப்பு வழங்க கட்டிட பணி நிறைவு சான்றிதழ் அவசியம் என்று தெரிவித்துள்ளார்.

7.5 மேல்முறையீட்டாளரின் கட்டிடம் 6 குடியிருப்பு பகுதிகளை கொண்டுள்ளதாலும் மேல்முறையீட்டாளர் பணி நிறைவு சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்காத காரணத்தாலும் அவரது விண்ணப்பமானது 05.04.2022 அன்று எதிர்மனுதாரரால் ரத்து செய்யப்பட்டுள்ளது.

7.6 மேல்முறையீட்டாளர், தான் மின் இணைப்பு கோரி விண்ணப்பிக்கும் கட்டிடமானது 2019–க்கு முன்னதாகவே கட்டப்பட்ட கட்டிடம் என்றும் எனவே கட்டிட பணி நிறைவு சான்றிதழ் அவசியம் இல்லை என்றும் தெரிவித்து அதற்குரிய வரி ரசீதுகளையும் சமர்ப்பித்துள்ளார்.

7.7 மேல்முறையீட்டாளர் 2019 ஆம் வருடத்திற்கு முந்தைய காலகட்டத்தில் மேற்கூறிய கட்டிடத்தில், திருப்பூர் மாநகராட்சியில் ஒரு வீட்டிற்கு மட்டுமே வரி செலுத்தி வருவதாகவும், திட்ட அனுமதி (Planning Permit) ஏதும் சமர்ப்பிக்கவில்லை என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 ஒரு புதிய மின்னிணைப்பு வழங்குவது சம்பந்தமாக விளக்கம் பெற தமிழ்நாடு பகிர்மான விதி எண்.27–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதியின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது

*"27. Requisitions for Supply of Energy:*

(1) *The provision regarding the duty of Licensee as detailed in section 43 of the Act to supply electricity on request is reproduced below:*

(1) *Save as otherwise provided in this Act, every distribution licensee, shall, on an application by the owner or occupier of any premises, give supply of electricity to such premises, within one month after receipt of the application requiring such supply:*

*Provided that where supply requires extension of distribution mains, or Commissioning of new sub-stations, the distribution licensee shall supply the electricity to such premises immediately after such extension or Commissioning or within such period as may be specified by the Appropriate Commission.*

*Provided further that in case of a village or hamlet or area wherein no provision for supply of electricity exists, the Appropriate Commission may extend the said period as it may consider necessary for electrification of such village or hamlet or area.*

*Provided that the licensee will refuse to supply electricity to an intending consumer who had defaulted payment of dues to the licensee in respect of any other service connection in his name.*

*Explanation:- For the purposes of this sub-section, "application" means the application complete in all respects in the appropriate form, as required by the distribution licensee, along with documents showing payment of necessary charges and **other compliances**."*

****

*11) The requirements notified by Authority through regulations shall be complied with for availing Service connections.*

*****

***Explanation:-** For removal of doubts, it is hereby declared that the expression "other compliances" occurring in the Explanation to section 43(1) of the Act as reproduced in sub-regulation (1) shall mean the documents mentioned in the Forms specified in ANNEXURE III to this Code and any decree or order or judgment of Courts."*

7.9 மேற்கண்ட பத்திகளில் உள்ள பொருள் விளக்கத்தின்படி ஒரு விண்ணப்பம் என்பது அவசியமான கட்டணச் செலுத்துகையை மற்றும் பிற இணங்குகைகளைக் காட்டுகிற (other compliances) ஆவணங்களுடன் சேர்த்து பகிர்மான உரிமதாரரால் வேண்டுறுத்தப்படுகிறவாறு உரிய படிவத்திலுள்ளதும் அனைத்து வகைகளிலும் நிறைவான விண்ணப்பம் (application complete in all respects) எனப்பொருள்படும். மேலும் விதி எண்.11–ல் உள்ள விளக்கத்தின்படி ஐயங்களை அகற்றும் பொருட்டு (1)–ம் உள்–ஒழுங்குமுறை விதியில் மறு ஆக்கம் செய்யப்பட்டுள்ள சட்டத்தின் 43(1)–ஆம் பிரிவுக்குரிய விளக்கத்தில் வரும் " பிற இணங்குகைகள்" என்ற வாசகத்தின் பொருள் என்னவென்றால், இந்த விதித்தொகுப்பில் இணைப்பு III–இல் உள்ள படிவங்களில் கூறப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் நீதிமன்ற தீர்ப்பு அல்லது உத்தரவு அல்லது ஆணைகளாகும் என தெரிய வருகிறது.

7.10 இவ்வழக்கில் எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தின் பேரில் களஆய்வு செய்ததில் அக்கட்டிடம் 6 குடியிருப்புகள் கொண்டதாகவும், ஒரு குடியிருப்பின் மேல் கான்கிரீட் தளம் அமைத்து இரண்டு தளங்களுக்கான கட்டுமான பணிகள் நடந்து கொண்டிருப்பதாலும், அக்கட்டிடத்திற்கு மின்னிணைப்பு வழங்க மாநகராட்சியில் கட்டிடம் முடிக்கப்பட்ட சான்று அவசியம் என கோரியுள்ளார். எனவே, இதுசம்பந்மாக தமிழ்நாடு அரசு வழிகாட்டுதழின்படி உரிமதாரர் வழங்கியுள்ள விதிமுறைகள் கொண்ட CE/Commercial's Memo.No.CE/Comml/ SE/Comml/ EE3/ AEE2/FPlg.per/D.139/2020, dt. 04.07.2020 என்ற கடிதத்தை ஆராய விரும்புகிறேன். அதன் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“2. The Hon’ble Division Bench of High Court of Madras in its order dated 09-01-2018 in W.P. No. 14520 of 2017 had directed the utilities including TANGEDCO to follow the guidelines stipulated by the Government of Tamil Nadu.*

*3. While so, the Government of Tamil Nadu, in G.O. Ms. 18, Municipal Administration and Water Supply (MA.I), dated 04.02.2019, notified the Tamil Nadu Combined Development and Building Rules, 2019 and the same came into force with effect from 04-02-2019.*

*4. Rule 20 of the said Rules, 2019, states that for all buildings except residential building upto 12m in height not exceeding 3 dwelling units or 750 sq. m and all type of Industrial buildings, the applicant or owner or Power of Attorney Holder or Registered Developer and any other Person who is acquiring interest shall submit a completion report to obtain Completion Certificate, certifying that the building has been completed as per the approved plan, from the competent authority that has issued Planning Permit before getting service connections such as electric power connection, water supply sewerage connection.”*

****

*6. In this connection, the instructions were issued vide reference (5) cited based on the Tamil Nadu Combined Development and Building Rules, 2019. As there was a deviation from the said Rules, 2019, in the above instructions, the same is now withdrawn. In the light of the position stated in paragraphs 2 to 5 above, the following revised instructions are issued for strict adherence throughout the State, which will supersede all earlier instructions including based on the orders of the Hon'ble High Court, Madras:*

*(a) Except residential building upto 12m in height not exceeding 3 dwelling units or 750 sq.m and all type of Industrial buildings, all other buildings requires completion certificate before effecting electricity service connection(s). For the exempted buildings, the intending consumer shall not be insisted to produce Planning Permit and Completion Certificate for effecting electricity service connections.*

*(b) While registration of application for permanent electricity supply, except as far as the exempted buildings stated above, the application shall be accompanied with planning permit.*

*(c) In view of the provisions contained in section 175 of the Electricity Act, 2003, (Provisions of this Act to be in addition to and not in derogation of other laws), as far as the buildings coming under non-exempted category are concerned, on completion of the construction of the building, the temporary electricity service connection provided for construction purpose has to be disconnected and the permanent electricity service connection(s) shall be provided on receipt of the completion certificate as stated above. However, this will not apply to the exempted buildings and as such, for exempted buildings alone, the provisions contained in Regulation 39 of the Tamil Nadu Electricity Distribution Code, 2004 shall be followed.”*

7.11 மேற்கூறிய விதிமுறைகள் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் 09.01.2018 அன்று வழங்கிய உத்தரவின்படி தமிழ்நாடு அரசால் 04.02.2019 அன்று வழங்கப்பட்ட வழிகாட்டுதலின்படி உரிமதாரரால் நடைமுறை படுத்தப்பட்டுள்ளது. அந்த விதிமுறைகளின்படி 3 குடியிருப்பு அலகுகள் அல்லது 750 சதுர மீட்டருக்கு மிகாமல் அல்லது 12 மீ உயரமுள்ள குடியிருப்பு கட்டிடங்கள் மற்றும் அனைத்து வகையான தொழில்துறை கட்டிடங்கள் (exempted buildings) தவிர உள்ள அனைத்து கட்டிடங்களுக்கும் (Non–exempted buildings) மின்சார இணைப்பு வழங்குவதற்கு முன் கட்டிட நிறைவு சான்றிதழ் Completion Certificate அவசியம் என தெரிய வருகிறது.

7.12 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர், தான் மின் இணைப்பு கோரி விண்ணப்பிக்கும் கட்டிடமானது 2019–க்கு முன்னதாகவே கட்டப்பட்ட கட்டிடம் என்பதால் கட்டிட பணி நிறைவு சான்றிதழ் அவசியம் இல்லை என தெரிவித்துள்ளார். எதிர்மனுதாரர் தன்னுடைய வாதத்தில் 25.03.2022 அன்று இணையதளம் மூலம் விண்ணப்பம் பெறப்பட்டு ஆய்வு மேற்கொண்டபொழுது, ஏற்கனவே அந்த முகவரியில் இரண்டு மின்னிணைப்புகள் பயன்பாட்டில் உள்ளதும், மேலும் அந்த முகவரியில் 6 குடியிருப்புகள் உள்ளதும் கண்டறியப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

7.13 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி 3 குடியிருப்பு அலகுகளுக்கு மேற்பட்ட கட்டிடங்களுக்கும் (Non–exempted buildings) மின்சார இணைப்பு வழங்குவதற்கு முன் கட்டிட நிறைவு சான்றிதழ் Completion Certificate அவசியம் என தெரிய வருகிறது. மேல்முறையீட்டாளர் மின்னிணைப்பு கோரும் கட்டிடம் 2019 முன்பே அனைத்து குடியிருப்பும் கட்டப்பட்டிருந்தது உறுதிசெய்யப்படாததாலும், தற்சமயம் கட்டிட வேலை தொடர்ந்து நடைபெற்று வருவது தெரியவருவதாலும், தற்சமயம் மின்னிணைப்பு கோரும் 25.03.2022 நாளது காலகட்டத்தில் CE/Commercial அவர்களின் 04.07.2020 சுற்றறிக்கையானது நடைமுறைக்கு வந்துவிட்டது தெரியவருகிறது. அதன்படி, மேல்முறையீட்டாளரின் கட்டிடம் (Non–exempted building) விலக்கு அளிக்கப்படாத கட்டிடம் என்ற வரையறுக்குள் வருவதாலும், மேலும், தற்சமயம் கட்டிடத்தின் ஒரு குடியிருப்பின் மேல் கட்டிட வேலை நடைபெற்று வருவதாலும் மேல்முறையீட்டாளர் கட்டிட நிறைவு சான்றிதழ் வழங்கும்பட்சத்தில்தான் மின் இணைப்பு வழங்க இயலும் என்ற எதிர்மனுதாரர் வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது என தீர்வு செய்யப்படுகிறது.

8.0 <u>முடிவுரை</u>:

8.1 மேற்கண்ட பத்தி 7–இல் உள்ள தீர்வுகளின்படி மேல்முறையீட்டாளரின் கட்டிடம் (Non–exempted buildings) விலக்கு அளிக்கப்படாத கட்டிடம் என்ற வரையறுக்குள் வருவதால் மேல்முறையீட்டாளர் கட்டிட நிறைவு சான்றிதழ் வழங்கும்பட்சத்தில் மேல்முறையீட்டாளர் கோரும் கட்டிடத்திற்கு மின் இணைப்பு வழங்குமாறு எதிர்மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 91/2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு D. சக்திவேல், – By RPAD
எண் 160, (DSK) Tsk மருத்துவமனை எதிரில்,
NP நகர், திருப்பூர் – 641 606.

2. உதவி மின்பொறியாளர்/ கிழக்கு/நகரம்/திருப்பூர்,
திருப்பூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தாராபுரம் ரோடு, உஷா திரையரங்கம் எதிரில்,
திருப்பூர் – 641 602.

3. மேற்பார்வை பொறியாளர், – By Email
திருப்பூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
19A & 19B, ஜோதிநகர்,
PN ரோடு, திருப்பூர் – 641 603.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.